தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 10-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**நம்மாழ்வார் வேளாண்மை தொழில் நுட்பக் கல்லூரி வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் தற்பொழுது இயங்கி வரும் 17 தனியார் உறுப்பு வேளாண்மை கல்லூரிகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தனியார் கல்லூரிகளுக்கான நடைமுறைக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையாக இயங்குவதை உறுதிப் படுத்தும் நோக்கில், மேற்குறிப்பிடப்பட்ட தனியார் வேளாண்மைக் கல்லூரிகளின் தாளாளர்கள் மற்றும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழக பதிவாளர் ஆகியோருக்கிடையே முத்திரைத் தாளில் 10-3-2016 முதல் 23-3-2016 வரை அட்டவணைப்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறே இன்று (10-3-2016) இராமநாதபுரம் மாவட்டம், பேரையூரில் இயங்கி வரும் நம்மாழ்வார் வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரியின் தாளாளர் மற்றும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஆகியோருக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது. இணைப்பதிவாளர் மற்றும் இதர அலுவலர்களும் உடன் இருந்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்